

தனி பிரதி
ரூ.10/-



PORIYIYAL KADHIR

# பொறியியல் கதிர்

கதிர் 46 | பாரிப்பு 2 | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஜனவரி 2015

**அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.**




நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்

பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

# நிக்காஹ் (திருமண) அழைப்பிதழ்

பேரன்புடையீர்!

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பேரருளாலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆ பரக்கத்தாலும், நிகழும் ஹிஜ்ரி 1436-ம் வருடம் ரபியுல் அவ்வல் பிறை 19-ம் நாள் (11.01.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்குமேல் 11.30 மணியளவில் முபாரக்கான நன்னேரத்தில்

புதுக்கோட்டை மாவட்டம், செங்கீரை, (மர்ஹூம்) N. காதர்ஷா சாகிக் - ஜெஹரா பீவி அவர்களின் பேத்தியும், K. சத்தார் - வகிதா அவர்களின் புதல்வியுமாகிய தீன்குலச்செல்வி

**Dr. S. சர்மிளா, M.B.B.S.,**

என்கிற மணாளிக்கும்

வைத்தியர் (மர்ஹூம்) புடேன்கான் சாயபு - சகீனாபீ அவர்களின் பேரனும், காஞ்சிபுரம், பாலுசெட்டிசத்திரம், Dr. B. பாஷாகான் - கௌஸிபீ அவர்களின் புதல்வனுமாகிய தீன்குலச்செல்வன்

**Dr. B. தமீம் அன்ஸாரி, M.B.B.S., M.D.,**

என்கிற மணாளருக்கும்

இன்ஷா அல்லாஹ் நிக்காஹ் செய்யப் பெரியோர்களால் நிச்சயித்தவண்ணம் மேற்படி திருமணம் புதுக்கோட்டை டவுன், தெற்கு 3-ம் வீதி, **S.A.K. திருமண மஹாலில்** நடைபெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை ஹக்கில் துஆ செய்வதுடன் அதன்பின் நடைபெறும் விருந்து உபசரிப்பிலும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



தங்கள் அன்புள்ள,
**Er. K. சத்தார்**
இளம் பொறியாளர் பொதுப்பணித்துறை
துணைத் தலைவர்,
புதுக்கோட்டை கிளை, TNEA
**S. வகிதா**

பொதுச் செயலாளர் மடல்



மடல் - 2 (2014 - 2015)

## தொடரும்
## நம் பயணம் .......

### அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!

அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த ஆண்டு எல்லோருக்கும் நல்ல ஆண்டாக அமைய தமிழ்நாடு பொறியியல் சங்கம் வாழ்த்துகிறது.

அலைகள் ஓய்வதில்லை. அதுபோல தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு பிரச்சினைகளும் ஓய்வதில்லை. எல்லா பிரச்சினைகளையும் முடித்துவிட்டு கொஞ்சமாவது நிம்மதி பெருமூச்சு விடலாம் என்று நினைப்பதற்குள் புதிய பிரச்சினைகள் வந்துவிடும். வழக்கம்போல் போராடி பிரச்சினைகளுக்கு தீர்வு காண்போம். சாம்பலானபிறகும் மீண்டும் பறக்கும் பீனிக்ஸ் பறவை போல மீண்டும் மீண்டும் புதிய உத்வேகத்துடன் புயலாய் கிளம்புவோம். இயக்கத்திற்காக எந்தவித தியாகத்தை செய்யவும் தயாராக இருப்போம்.

அற்ப காரணங்களுக்காக, தன் சுயநலத்திற்காக, தன் ஈகோவிற்காக, இயக்கம் அழிந்தாலும் பரவாயில்லை என்று நினைத்து இயக்கத்தை பிளவுப்படுத்தும், இயக்கத்தை பலவீனப்படுத்தும், ஒற்றுமையை குலைக்கும் செயல்களில் ஈடுபடும் சில கயவர்களை அடையாளம் கண்டு கொள்வோம். அவர்களை புறக்கணிப்போம். எதிரிகளிடம் நாம் எப்போதுமே தோற்றதில்லை. தோற்கபோவதும் இல்லை. நாம் நம்மிடையே உள்ள துரோகிகளிடம் தான் தோற்றுப்போகிறோம்.

சிலர் செய்ய வேண்டிய முக்கிய காரியங்களை செய்ய வேண்டிய நேரத்தில் செய்யாமல் விட்டதாலும், தற்போது செய்யக்கூடாத காரியங்களை, செய்யக்கூடாத நேரத்தில் செய்வதாலும் நாம் மிகுந்த பாதிப்புக்குள்ளாகியிருக்கிறோம். இவை அனைத்தையும் இந்த புத்தாண்டில் முறியடிப்போம். வெற்றி பெறுவோம்.

விதித்திருத்தங்களை விரைந்து பெற 31.01.2015 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற இருக்கும் மாநில செயற்குழுக் கூட்டத்தில் சில முக்கிய முடிவுகள் எடுக்க இருக்கிறோம். எனவே மாநில செயற்குழுக் கூட்டத்தில் தவறாமல் கலந்துக் கொண்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு ஆணை வழங்கப்பட்டு இன்னும் 43 பொறியாளர்களுக்கு பணி அமர்வு ஆணை வழங்கப்படவில்லை. தற்போது சுமார் 18 உதவி செயற்பொறியாளர் பணியிடங்கள் மட்டுமே காலியாக உள்ளன. பிப்ரவரி முதல் வாரத்தில் இந்த பதவி உயர்வு பட்டியல் காலாவதி ஆகிறது. எனவே உதவி செயற்பொறியாளர் பணி அமர்வு ஆணை வழங்கப்பட உரிய முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளிக்கும் கோப்பு அரசுக்கு அனுப்பப்பட்டு சில விவரங்கள் கோரப்பட்டு முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த கோப்பை மீண்டும் அரசுக்கு அனுப்புவதில் தேவையற்ற காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. இது மிகவும் வருந்தத்தக்க செயலாகும்.

விரைந்து கோப்பை அனுப்ப நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். ஜனவரி மாதத்தில் அனுப்பிவிடுவதாக உறுதி அளித்துள்ளார்கள். இனியும் கால தாமதமானால் சம்பந்தப்பட்டவர்கள் மோசமான விளைவுகளை சந்திக்க வேண்டிவரும் என்று எச்சரிக்கிறோம்.

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

Er. D. MURUGESAN, General Secretary
Cell Phone Nos. 9444 999 588, 9281 309 688
E.mail: d.murugavelsivan@gmail.com

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

## இரங்கல் செய்தி

திருவாரூர் - நாகை கிளை முன்னாள் தலைவர் பொறி. எம். பக்கிரிசாமி, உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் 19.12.2014 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் புதுக்கோட்டை கிளை உறுப்பினர் பொறி. கே. சத்தார், இளம் பொறியாளர் அவர்களின் மகள் திருமண நன்கொடையாக ரூ. 1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) மையச்சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கோவை - பொள்ளாச்சி கிளை உறுப்பினர் பொறி.பி.சிவம், உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் ஓய்வு பெற்றதற்காக கோவை - பொள்ளாச்சி கட்டிட நன்கொடையாக ரூ. 5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) கிளைச்சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் வேலூர் கிளை தலைவர் பொறியாளர் மு. ரவி, உதவிப் பொறியாளர் அவர்களின் மகள் திருமண நன்கொடையாக ரூ. 2001/- (ரூபாய் இரண்டாயிரத்து ஒன்று மட்டும்) மையச்சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

அனைவருக்கும் தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

## ABSTRACT

Establishment - Public Works Department - Tamil Nadu Engineering Subordinated Service - W.A. No. 301 of 2010 in W.P. No. 5809 of 2007 - filed by Thiru. K. Durairajan, Assistant Engineer (Retired) & two others - W.P. Nos. 10230 of 2012 and other batches of cases filed by certain Assistant Executive Engineers & Assistant Engineer (Retired) - Order of the Hon'ble High Court of Madras - Implementation - Fixation of pay of the appellants / petitioners in the post of Draughting Officer on par with Thiru. K. Palanisamy, Draughting Officer (Retired) - Orders - Issued.

---

**Public Works (C1) Department**

**G.O. 2D. No. 66** **Dated: 28.11.2014**
**ஜய. கார்த்திகை 12**
**திருவள்ளுவர் ஆண்டு 2045**
**Read:-**

1. G.O. (Ms.) No. 1425, Public Works Department, dated: 4.11.1978
2. G.O. (Ms.) No. 2508, Public Works Department, dated: 21.12.1982
3. G,O. (Ms.) No. 767, Public Works Department, dated: 25.3.1986
4. G.O. (Ms.) No. 395, Public Works Department, dated: 22.6.1998
5. Order of the Hon'ble High Court of Madras in W.P. No. 5809 of 2007, dated:01.09.2009.
6. Order of the Hon'ble Division Bench of Madras High Court in W.A. No. 301 of 2010, dated: 08.12.2011.
7. From the Engineer-in-Chief, Water Resources Department & Chief Engineer (General), Public Works Department, letter No. S5(2) / 54424 / 2002, dated: 14.03.2012.
8. From the Advocate General of Tamil Nadu, High Court of Madras, OPN. No. 30/2013, dated. 18.03.2013.
9. From the Engineer-in-Chief letter No. S5(2) / 54424 / 2002, dated. 11.10.2013, 19.11.2013 & 06.12.2013.

-------

**ORDER:-**

In the Government order first read above, single unit seniority was prescribed for the post of Draughtsmen in Public Works Department with retrospective effect from 1.9.1978. In the Government Order second read above, guidelines were issued for implementation of the single unit seniority. In the Government Order third read above, amendments to the Special Rules for Tamil Nadu Engineering Subordinate Service were issued with effect from 1.9.1978, for introduction of single unit seniority. The single unit seniority list and the combined seniority list were issued in the year 1983. Till the preparation of combined seniority list, the unit officers continued to promote / appoint Draughting Officials, i.e., even after 1.9.1978. In the meantime, the Chief Engineer(General),Public Works Department had reverted many Draughting Officers as Junior Draughting Officers for want of vacancy owing to certain administrative reasons. As the juniors in the single unit seniority list faced reversion, they filed many cases in the High Court.

2. Before issuing guidelines for implementation of single unit seniority ordered in the Government Order second read above, one Thiru. K. Palanisamy, Junior Draughting Officer was temporarily promoted as Draughting Officer with effect from 27.09.1982 with a condition that the promotion would be subject to finalization of single unit seniority and he could have no right to stake his claim, with reference to seniority. Subsequently, Thiru. K. Palanisamy and 13 others, who were for juniors as per the Combined Single Unit Seniority list issued, were reverted to accommodate their seniors. Hence they approached the court and obtained Interim Stay for their reversion and had been continuing as Draughting Officers on the strength of the interim orders of the High Court.

3. The cases filed in the High Court were transferred to the Tamil Nadu Administrative Tribunal and the following orders were passed by the Tamil Nadu Administrative Tribunal in T.A. No. 300/89 (batch of cases) on 19.6.1991:-

(i) Protection should be afforded to all promotions made till the date of actual issue of the amendment to the rules. The services should be regularized, increment and pay protection should be given.

(ii) For the purpose of seniority, panels may be drawn up for each year with reference to the actual number of vacancies that had arisen during the year based on combined single unit seniority and qualifications with reference to the crucial date for preparation of the panel in each year. In respect of appointments made in each year, the crucial date for considering the eligibility for inclusion in the panel for that year should be a prior to the year.

(iii) While such panels may be the basis for seniority promotions already made will stand.

(iv) If this will cause hardship in that the seniors would be denied the promotion for wand of vacancies, the only course would be to create certain number of supernumerary posts in lieu of equal number of posts in the lower category so that eligible persons whose claims have been overlooked due to improper implementation of the orders earlier may be suitably protected.

4. The Government preferred an Appeal before the Hon'ble Supreme Court of India in SLP Nos. 7218 to 7250 of 1992 against the above orders of the Hon'ble Tamil Nadu Administrative Tribunal. The Hon'ble Supreme Court in its order dated 29.4.94 dismissed the Special Leave Petitions and upheld the orders of the Hon'ble Tamil Nadu Administrative Tribunal.

5. Accordingly, in the Government Order fourth read above, the Government had sanctioned 340 number of supernumerary posts in the category of Draughting Officers, with effect from 27.09.1982, the date on which Thiru K. Palanisamy, junior was promoted as Draughting Officer, so as to accommodate the persons who were seniors to Thiru K. Palanisamy. In that order, it was also directed that the individuals to be accommodated against the supernumerary posts created, were eligible to get their pay fixed on par with Thiru K. Palanisamy, with effect from the date of their joining in the post of Draughting Officer.

6. Inspired by the above Government Order, Tvl. K. Durairajan, N.Gnanapandithan, G. Ayyavoo and G. Kamalapathy, whose names were included at Sl.Nos. 112, 204, 189 & 181 respectively in the Annexure to the Government Order fourth read above and who were promoted as Assistant Engineers on 4/98 itself, filed a case in O. A No. 4469 of 2002 before the Tamil Nadu Administrative Tribunal praying for fixation of their pay in the post of Draughting Officer on par with one Thiru K.Palanisamy with retrospective effect from 27.9.1982 and consequently to fix their scale of pay in the category of Assistant Engineers.

7. The above Original Application was transferred to the High Court of Madras as W.P. No. 5809 of 2007 and in the order of the Hon'ble High Court fifth read above, the same was dismissed with the following observations:-

".... The petitioners have not made any case with respect to the pay fixation. The question of pay parity arises only when the junior and senior held the same or equivalent post. However, in the present case, the so called junior was holding lower post than that of the petitioner. Hence, no comparison will arise. The writ petition is misconceived. Accordingly, the same is dismissed."

8. Tvl. K. Durairajan, N. Gnanapadithan and G. Kamalapathy filed Writ Appeal in W.A. No. 301 of 2010 against the above order of the High Court. The Hon'ble Division Bench of Madras High Court in its order sixth read above, has passed the following orders:-

".... As the appellants possessed the degree qualifications, they were promoted. Merely because they were promoted to the post of Assistant Engineer, the benefit conferred on them by virtue of the G.O. (Ms.) No. 395, Public Works Department, dated 22.6.1998 cannot be taken away. It is to be noted that the said Government Order came to be passed even after the promotion of the appellants and Government was conscious of the said fact and included their names in the Annexure to the said Government Order, Hence, in our opinion, the benefit to the said Government order for notional promotion to the post of Draughting Officer with effect from 27.9.1982, the date on which Thiru K. Palanisamy, junior of the appellants was promoted, should be extended to the appellants and if such benefit is conferred, in terms of the above said Government Order, the appellants are also eligible to get pay fixation on par with the said Thiru. K. Palanisamy as directed in the Government Order. The Government Order directs payment of pay fixation with effect from the date of joining the post of Draughting Officer. As the appellants have already been promoted as Assistant Engineers, their consequential pay also should be revised in the category of Drqughting officer with effect from 27.9.1982 till the promotion to the post of Assistant Engineer and consequently in the post of Assistant Engineer as well.

The grievance of the appellants raised in the Writ Appeal is well founded as they only seek for the extension of the benefit of the Government Order. The stand of the respondents appears to be bad since the appellants have already been promoted at the time when the Government Order came to be passed. The plea of the respondents that the appellants are not entitled to the benefits of the Government Order cannot be accepted.

In view of our categorical finding that the names of the appellants are shown in the annexure to the Government Order entitling them for the benefit of paragraph 4 of the G.O. (Ms..) No. 395, Public Works Department, dated 22.6.1998, the appellants are entitled to succeed. Accordingly, the writ Appeal is allowed. The impugned order passed in the Writ Petition is set aside."

9. The Learned Advocate General of Tamil Nadu, High Court of Madras, in his considered opinion eighth read above, has opined that the said reasoning of the Hon'ble Division Bench is reasonable and in accordance with law and this is not a fit case for filing an appeal.

10. Further, the Hon'ble High Court of Madras has also passed orders in the following Writ petitions filed with similar prayer, directing the respondents to extend the benefit of the orders of the Hon'ble Division Bench sixth read above to the petitioners:-

| **Sl. No.** | **W.P.No.** | **Name of the petitioners (AEEs/AE (Rtd.))** | **Sl.No.in the Annexure of G.O.(Ms.) No. 395,PWD dated.22.6.98** | **Date of orders of Hon'ble High Court** | **Orders of the High Court in brief** |
|---|---|---|---|---|---|
| 1. | 10230 of 2012 | B. Lakshmi | 226 | 4.6.2012 | ".. the first respondent is directed to pass necessary orders within a period of three months." |
| 2. | 5805 & 5808 of 2007 (O.A. Nos.3 493 and 4639 of 2002) | G. Srinivasan &R.Narayana samy | 217<br>41 | 18.6.2012 | ".. The case of the petitioners is squarely covered by the decision of Hon'ble Division Bench of this Court in W.A. No. 301 of 2010, dated. 8.12.2011." |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | 6968 of 2007 | M.Ramakrishnan<br>V. Gurusamy<br>A. Vellaimani<br>R. Muthuraj<br>M. Arumuganainar<br>P. Sasi Kumar<br>S.Kumaraswamy | 198<br>202<br>176<br>190<br>96<br>199<br>142 | 23.7.2012 | "..The case of the petitioners is squarely covered by the decision of Hon'ble Division Bench of this Court in W.A.No. 301 of 2010, dated 8.12.2011." |
| 4. | 21982 & 21983 of 2012 | R.Soundararajan & A. Vasanthan | 148<br>224 | 13.8.2012 | "Direction to the respondents to extend the benefit within a period of six months..." |
| 5. | 8084 of 2013 | P. Venugopal | 73 | 13.9.2012 | "..respondents are directed to grant the benefits. within a period of sixteen weeks." |
| 6. | 25177,25178 &25179 of 2012 | C.M.Dhandapani<br>T. Udhayakumar<br>R. Paulraj | 132<br>154<br>168 | 17.9.2012 | "..direction to the respondents to extend the benefit... within a period of six months." |

11. The Engineer in Chief (Buildings), Chief Engineer (Buildings), Chennai Region and Chief Engineer (General), Public Works Department has stated that the appellants in W.A.No.301 / 2010 have represented to fix their pay in the post of Draughting Officer on par with Thiru. K. Palanisamy with effect from 27.9.1982 notionally and effecting monetary benefit from the date of issue of the Government Order fourth read above. Accordingly, in order to implement the orders of the Hon'ble Division Bench of Madras High Court and the similar orders of the Hon'ble High Court of Madras as stated at paras 8 and 10 above, the Chief Engineer (General), Public Works Department has requested orders of the Government to fix the pay of the appellants / petitioners in W.A.No. 301 of 2010, W.P.No. 10230 of 2012, W.P.Nos. 5805 and 5808 of 2007, W.P.No. 6968 of 2007, W.P.Nos. 21982 and 21983 of 2012, W.P.No. 8084 of 2013 and W.P.Nos. 25177 - 25179 of 2012 in the post of Draughting Officer on par with Thiru. K. Palanisamy

with effect from 27.9.1982 notionally and effecting monetary benefit from the date of issue of the Government Order fourth read above.

12. The Government after careful examination, have decided to accept the above proposal of Chief Engineer (General), Public Works Department so as to implement the judgment orders of the Hon'ble High Court of Madras as stated at paras 8 and 10 above.

13. Accordingly, the Government direct that the pay of the appellants in W.A.No. 301 of 2010 and the petitioners in W.P.No. 10230 of 2012 W.P.Nos. 5805 and 5808 of 2007 (O.A.Nos. 3403 and 4639 of 2002) W.P.No. 6968 of 2007, W.P.Nos. 21982 and 21983 of 2012, W.P.No. 8084 of 2013 and W.P.Nos. 25177 - 25179 of 2012, be fixed in the post of Draughting Officer on par with Thiru. K. Palanisamy with effect from 27.9.1982 notionally with monetary benefit from the date of issue of the Government Order fourth read above, i.e., from 22.06.1998.

14. The Engineer-in-Chief (Buildings), Water Resources Department and Chief Engineer (General), Public Works Department is directed to revise, the pay of the above appellants / petitioners accordingly.

15. The order issue with the concurrence, of Finance department vide its U.O.No. 64498 / CMPC / 2014, dated 25.11.2014.

(By Order of the Governor)

M. Sai Kumar,

Principal Secretary to Government

To
The Engineer - in - Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai - 5.
The Engineer - in - Chief (Buildings), Chief Engineer (Buildings), Chennai Region, Public Works Department, Chennai - 5.
All the Chief Engineers in Public Works Department.
The Accountant General, Chennai - 18/9.
The Pay and Accounts Officers concerned.
The Treasury Officer concerned.
Finance (CMPC) Department, Chennai - 9.
Copy to:
The Principal Secretary - III to Hon'ble Chief Minister, Chennai - 9.
The P & AR (FR-IV) Department, Chennai - 9.
The Finance (B.G. I/CMPC / PW. II) Department, Chennai - 9.
Stock File / spare Copy.

// Forwarded by Order //

Section Officer.

**Office of the Executive Engineer, Thervai Kandigai Reservoir Project Division, Redhills, Chennai - 52.**
**Present: Er. A.M. Madhavan, B.E.,**
**Executive Engineer, PWD, WRD.,**
**<u>Procd. No. EA1 / F-10 / 222 / 2014 / dt. 3.12.2014.</u>**

**SUB:** Revised Scales of Pay Rules 2009 - Re-fixation of pay based on the recommendations of the Pay Grievance Redressal Cell - Ordered.

**REF:** G.O. Ms. No. 237 Finance (PC) Dept. dated: 22.07.2013.

******

Based on the Government order in the reference cited, the pay of Thiru. B.Sakkaji, Assistant Executive Engineer of this office is re-fixed as follows, with effect from 04.04.2006. FN in which the individual moved to Special Grade in the post of Junior Engineer is as follows.

| **Moved to Spl. Grade in the post of Junior Engineer on 04.04.2006 FN** | |
|---|---|
| Pay as on 03.04.2006<br>Spl. Grade on 04.04.2006 F.N | Rs. 16600/- + GP 5400/-<br>PB-15600-39100 + GP 5400 |
| Add 3% + 3% increment | Rs. 660/-+Rs.660/-=Rs. 1320/- |
| **Pay Fixed on 04.04.2006 in JE (Spl. Gr)** | Rs. 17920/- + GP 5400/- |
| **Add:** Increment on 01.01.2007 at 3% | Rs. 700/- |
| **Total** | Rs. 18620 + G7P 5400 |
| **Add:** Increment on 01.01.2008 at 3% | Rs. 720/- |
| **Total** | Rs. 19340 + GP 5400 |
| **Add:** Increment on 01.01.2009 at 3% | Rs. 750/- |
| **Total** | Rs. 20090 + GP 5400 |
| **Add:** Increment on 01.01.2010 at 3% | Rs. 770/- |
| **Total** | Rs. 20860 + GP 5400 |
| **Add:** Increment on 01.01.2011 at 3% | Rs. 790/- |
| **Total** | Rs. 21650 + GP 5400 |
| **Add:** Increment on 01.01.2012 at 3% | Rs. 820/- |
| **Total** | Rs. 22470 + GP 5400 |

**Promoted as Assistant Executive Engineer on 21.11.12 FN pay fixed as per individual option as per rule 22 (1) (a) 1**

| | |
|---|---|
| Scale of pay JE (Spl. Gr) | PB-15600-39100+GP 5400 |
| Scale of pay AEE (Ordinary Gr) | PB-15600-39100+GP 6600 |
| Grade Pay difference (6600-5400) | GP 1200 |
| Pay as on 20.11.2012 AN (15600-39100+GP 5400) | Rs. 22470 + GP 5400 |
| Pay fixed on 21.11.2012 FN in AEE post as per 22 (1) (a) 1 | Rs. 22470 + GP 6600 |
| **Pay Fixed as per rule 22(b) after getting increment in lower post.** | |
| Pay as on 01.01.2012 in the JE post (Spl. Gr) | Rs. 22470 + GP 5400 |
| **Add:** Increment 3% 01.01.2013 (or) 1.04.2013 | Rs. 840 |
| **Pay Fixed on 01.01.2013 in the AEE Post Total** | Rs. 23310 + GP 5400 |
| **Add:** Increment in promotion AEE on 01.01.2013 G.P. Difference (5400-6600) = 1200 | Rs. 870/- |
| **Monetary Benefit w.e.f. 1.4.2013 Total** | Rs. 24180 + GP 6600/- |
| **Add:** Increment of 3% 01.01.2014 | Rs. 930/- |
| **Total** | Rs. 25110 + GP 6600/- |
| **Next Increment Date 01.01.2015** | |

The individual is entitled to draw the arrears of pay and Allowances w.e.f. 01.04.2013 as per the Government Order

Executive Engineer,PWD, WRD,
Thervai Kandigai Reservoir
Project Director, Redhills.

To
Thiru. B. Sakkaji,
Assistant Executive Engineer, PWD, WRD.,
Thervai Kandigai Reservoir Project Sub Division - 3, Uthukottai.
Cell: 94440 34843.

Copy to District Treasury, Tiruvallur.
Copy to Bill (2 Copies)

# 06.12.2014 அன்று சென்னையில் நடைபெற்ற மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம் 06.12.2014 அன்று காலை 10.30 மணிக்கு சென்னையில் பொறியாளர் சி.ப.சண்முகம் அரங்கில் மாநிலத் தலைவர் பொறியாளர் எம். பஞ்சவர்ணம் அவர்கள் தலைமையிலும், பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

மாநிலத் தலைவர் பொறியாளர் எம். பஞ்சவர்ணம் அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

மாநில துணைத் தலைவர் பொறியாளர். சி. கணபதி அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து உரையாற்றினார்.

பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் தன்னுடைய உரையில் மையச் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசினார். திரு. B. திருமால், மின்னியல் உதவி செயற்பொறியாளர் அவர்கள் தொடுத்த வழக்கில் கடந்த ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்பில் சொல்லப்பட்ட கருத்தை அடிப்படையாக கொண்டு அரசாணை எண். 66 சம்பந்தப்பட்ட வழக்கில் உயர் நீதிமன்றத்தில் நமக்கு பாதகமாக வழங்கப்பட்ட தீர்ப்பை எப்படி எதிர்க்கொள்வது என்பது குறித்து விரிவாக பேசினார். 1986-ஆம் ஆண்டு முதல் விதித்திருத்தம் (Rule Amendment) வழங்கப்படாமல் உள்ள அரசாணைகளுக்கு விரைந்து விதித்திருத்தம் பெற கடுமையான போராட்டங்கள் நடத்த வேண்டும் என்று மதுரையில் நடைபெற்ற மாநில பொதுக்குழுவில் தெரிவித்த கருத்துக்களை மீண்டும் வலியுறுத்தி பேசினார். தான் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க போவதாகவும் தெரிவித்தார்.

திருமால் வழக்கில் கூறப்பட்ட கருத்தை அடிப்படையாக கொண்டு அரசாணை எண். 66 சம்பந்தப்பட்ட வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்கொள்வது சம்பந்தமாக மையச் சங்க பொறுப்பாளர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தார்கள்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

**முடிவுகள்:**

1. தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநில செயற்குழுக் கூட்டம் ஜனவரி மாத இறுதியில் வடக்கு மண்டலம் சார்பாக நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.
2. விதித்திருத்தங்களை விரைந்து பெற வாயிற்கூட்டம், ஒருநாள் அடையாள உண்ணாவிரதம், சாகும்வரை உண்ணாவிரதம் ஆகிய போராட்டங்களை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.
3. அரசாணை எண். 66 சம்பந்தமாக உயர்நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வது என தீர்மானிக்கப்பட்டது.

# டிசம்பர் 2014 மாத பொறியாளர் இதழில் இருந்து

கடித எண். 001/பொ.செ. - பொ.ச./2014 - 61 நாள்: 26.11.2014.

பெறுநர்,

முதன்மை தலைமைப் பொறியாளர்,

நீர்வள ஆதார அமைப்பு மற்றும்

தலைமைப் பொறியாளர் (பொது) பொதுப்பணித்துறை,

சென்னை - 600 005.

அய்யா,

**பொருள்:** பணியமைப்பு - பொதுப்பணித்துறை - தமிழ்நாடு பொறியியல் பணித்தொகுதி - தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து இளநிலைப் பொறியாளர்களாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டு பின்னர் பணிமாற்றல் அடிப்படையில் முன்தேதியிட்டு உதவிப் பொறியாளர்களாகப் பணியமர்த்தப்பட்டவர்களின் பணிகளை வரன்முறைப்படுத்துவது - எதிர்ப்பு தெரிவித்தல் - தொடர்பாக.

**பார்வை:** 1. அரசாணை (நிலை) எண். 1 (பொ.ப.து) நாள். 02.01.1990.

2. அரசுக் கடித எண். 26642 / பி2 / 2003-10 / பொ.ப.து. / நாள்.24.02.2006.

3. அரசுக் கடித எண். 20241 / பி2 / 2006 - 6 / பொ.ப.து. / நாள்.15.06.2007.

4. மு.த.பொ., நீ.ஆ.அ. (ம) த.பொ. (பொது) பொ.ப.து., செயல்முறை எண். எஸ். 2(2) / 29148 / 2004 நாள். 18.10.2007.

5. மு.த.பொ. (க), த.பொ.(க) சென்னை மண்டலம், (ம) த.பொ. (பொது) பொ.ப.து., சென்னை கடித எண். எஸ். 2(2) / 29148 / 2004 நாள். 24.07.2013.

6. அரசுக் கடித எண். 21742 / பி2 / 2013 - 2 நாள். 11.12.2013.

பார்வை 2-ல் காணும் அரசுக் கடிதத்தில் தமிழ்நாடு பொறியியல் பணி மற்றும் தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப் பணிகளுக்கான சிறப்பு விதிகளுக்கு திருத்தம் வெளியிடுவது நிலுவையில் இருக்கும் போதே, அரசு ஆணை (நிலை) எண். 1, பொ.ப.து., நாள். 02.01.1990-ன் படி தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து ஏற்கனவே இளநிலை பொறியாளர்களாகப் பணியமர்த்தப்பட்டவர்கள் உட்பட பொறியியல் பட்டம் பெற்று ஐந்தாண்டுகள் அனுபவமுள்ள தொழில்நுட்ப உதவியாளர்களை மேல்முறையீட்டு நீதிப்பேரரணை விண்ணப்ப நாள். 7523 / 97-ல் சென்னை உயர்நீதி மன்றம் வெளியிடப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டு பணிமாற்றம் மூலம் உதவிப் பொறியாளர் (சிவில், மின்னியல், இயந்திரவியல்) ஆக பணி நியமனம் செய்ய தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

இளநிலை பொறியாளர்களாக பணியேற்கு முன்னர் பொறியியல் பட்டம் பெற்றவர்களுக்கு உதவிப் பொறியாளர்களாக பணிநியமனம் வழங்க தமிழ்நாடு பொறியியல் பணித்தொகுதி சிறப்பு விதிகளில் வழிவகை இல்லாததால், பார்வை 1-ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 2-ல் காணும் அரசுக் கடிதத்தில் வழங்கப்பட்ட தெளிவுரை ஆகியவற்றின் அடிப்படையில் 2006-ஆம் ஆண்டில் முதன் முதலில் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு உதவிப் பொறியாளர்களாகப் பணிநியமனம் வழங்கப்பட்ட போது தொழில்நுட்ப உதவியாளர் பதவியில் பணிபுரிந்தபோதே பொறியியல் பட்டத் தகுதி பெற்று பின்னர் இளநிலைப் பொறியாளர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு உதவிப் பொறியாளர்களாகப் பணி நியமனம் வழங்கப்படவில்லை.

பார்வை 3-ல் காணும் அரசுக் கடிதத்தில் தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து ஏற்கனவே இளம் பொறியாளர்களாகப் பணியமர்த்தப்பட்டவர்கள் உட்பட பொறியியல் பட்டம் பெற்று ஐந்தாண்டுகள் அனுபவமுள்ள தொழில்நுட்ப உதவியாளர்களை இந்திய உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு எண். 2495 / 2007-ல் வங்கப்படவுள்ள தீர்ப்புக்கு உட்பட்டு, தமிழ்நாடு பொறியியல் பணி, தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப்பணி விதிகளுக்கு விதித்திருத்தம் நிலுவையில் இருக்கும்பொழுதே பணிமாற்றம் மூலம் உதவிப் பொறியாளர் (சிவில், மின்னியல், இயந்திரவியல்) ஆக பணி நியமனம் செய்ய தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

பார்வை 4-ல் காணும் செயல்முறை ஆணையில் தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு பெற்று இளநிலைப் பொறியாளர்களாகப் பணிபுரிந்து வந்த 76 நபர்களுக்கு உதவிப் பொறியாளர்களாக நிபந்தனைகளுக்குட்பட்டு தற்காலிக அடிப்படையில் 24.02.2006 முதல் முன் தேதியிட்டு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 5-ல் காணும் கடிதத்தில் இந்த பணி நியமனம் தொடர்பாக பினவரும் விவரங்கள் அரசிற்கு தெரிவிக்கப்பட்டிருந்தன.

i. இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிப் பொறியாளர்களாகப் பணி நியமனம் வழங்க பார்வை 1-ல் காணும் அரசாணையில் வழிவகை செய்யபடவில்லை.

ii. பார்வை 2-ல் காணும் அரசு கடிதத்தின் அடிப்படையில் 2006-ஆம் ஆண்டில் 21 தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு தற்காலிக அடிப்படையில் உதவிப் பொறியாளர்களாகப் பணி நியமனம் வழங்கப்பட்டுவிட்ட நிலையில் தொழில்நுட்ப உதவியாளர் பதவியில் மேற்குறித்த 21 நபர்களைவிட முதுநிலையில் இருந்து ஏற்கனவே இளநிலைப் பொறியாளர்களாகப் பதவி உயர்வு பெற்றிருந்தவர்களுக்கு பார்வை 3-ல் காணும் அரசுக் கடிதத்தின் அடிப்படையில் 2007-ம் ஆண்டில் உதவிப் பொறியாளர்களாகப் பணி நியமனம் வழங்கப்பட்ட போது பணியில் முதியவர்கள் பணியில் இளையவர்களுக்கு பின்னால் பதவி உயர்வு பெறும் முரண்பாட்டினைத் தவிர்த்திடும் பொருட்டு பார்வை 2-ல் காணும் அரசுக் கடிதம் வெளியிடப்பட்ட நாளான 24.06.2006 முதல் முன் தேதியிட்டு தற்காலிக அடிப்படையில் உதவிப் பொறியாளர்களாகப் பணி நியமனம் வழங்குவதற்கு விதிகளில் வழிவகை இல்லை.

iii. பார்வை 4-ல் காணும் இவ்வலுவலக செயல் முறை ஆணையின் மூலம் உதவிப் பொறியாளர்களாகப் பணிநியமனம் வழங்கப்பட்ட 76 நபர்களில், கடைசியாக இடம் பெற்றுள்ள இரு நபர்கள் முறையே 01.03.2007 மற்றும் 28.03.2007 முதல் இளநிலைப் பொறியாளர்களாகப் பணிபுரிந்து வந்துள்ளனர். பார்வை 4-ல் காணும் செயல்முறை

ஆணையில் மேற்குறித்த இருவருக்கும் தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து இளநிலைப் பொறியாளர்களாக வழங்கப்பட்ட பதவி உயர்வு ஆணைகள் இரத்து செய்யப்பட்டு 24.02.2006 முதல் முன்தேதியிட்டு உதவிப் பொறியாளர்களாகப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது, விதிகளின் படி அமையாத செயல்பாடாகும்.

iv. தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு உதவிப் பொறியாளர்களாகப் பணி நியமனம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ள பார்வை 1-ல் காணும் அரசாணை அடிப்படையில் இதுநாள் வரை திருத்தங்கள் வெளியிடப்படவில்லை.

எனவே, இளநிலைப் பொறியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பணிநியமனம் வழங்குவதற்கு அரசாணை (நிலை) எண். 1 / பொபது / நாள்.02.01.1990-ல் வழிவகை செய்யப்படாத நிலையில் இளநிலை பொறியாளர்களாகப் பணியில் சேருமுன்னரே பொறியியல் பட்டம் பெற்று பின்னர் பார்வை 3-ல் காணும் அரசுக் கடிதத்தின் அடிப்படையில் 24.02.2006 முதல் முன் தேதியிட்டு உதவிப் பொறியாளர்களாகப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ள 76 நபர்களின் பணி நியமனங்களை முறைப்படுத்துவது குறித்து அரசின் தெளிவுரை கோரப்பட்டது.

பார்வை 6-ல் காணும் அரசு கடிதத்தில், இளநிலைப் பொறியாளர்களாக பதவி உயர்வு பெறும் முன்னரே பொறியியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர்கள், இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வு பெற்று பின்னர் பணிமாறுதல் மூலம் உதவிப் பொறியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்ட 76 நபர்களின் பணியினை வரன்முறை செய்ய அரசாணை / விதிகளில் வழிவகை இல்லை என்று தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், மேற்குறித்த 76 நபர்களின் பணி நியமனங்களை சிறப்பு இனமாக கருதி வரன்முறை செய்யுமாறு அரசினை மீண்டும் வலியுறுத்தியிருப்பதாக அறிய வருகிறோம். அரசாணை / விதிகளுக்கு முற்றிலும் புறம்பான இச்செயல்பாடு, எங்களை மிகவும் அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. பொறியாளர்கள் மத்தியில், குறிப்பாக உதவிப் பொறியாளர்கள் மத்தியில் மிகுந்த மன வருத்தத்தினையும், அதிருப்பதியையும் ஏற்படுத்தி உள்ளது.

இப்பொருள் தொடர்பாக கடந்த 23.09.2014 அன்று நடைபெற்ற குறைதீர் கூட்டத்தில் தங்களின் கவனத்திற்கு கொண்டு வந்தோம். முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.அ (ம) தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., அவர்கள் இது குறித்து ஆவன செய்வதாகவும், மேற்படி கருத்துருவை திரும்ப பெற நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி அளித்துள்ளீர்கள்.

எனவே, மேற்குறித்த 75 நபர்களின் பணிநியமனங்களை வரன்முறைப்படுத்துவது தொடர்பான கருத்துருவினை உடனடியாக திரும்ப பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என தங்களை மிக பெரிதும் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி !

இப்படிக்கு,

| | |
|---|---|
| பொறி. பெ. கார்த்திக்கேயன் | பொறி. ர. ரவிராஜ், |
| பொதுச் செயலாளர் / | பொதுச் செயலாளர் / |
| உதவிப் பொறியாளர் சங்கம் | பொறியாளர் சங்கம். |

**நகல்:** அரசு முதன்மை செயலாளர், பொதுப்பணித்துறை, தலைமை செயலகம், சென்னை-9 அவர்களின் கனிவான கவனத்திற்கும் மற்றும் தக்க நடவடிக்கைக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

# இயங்கும் உலகம்

## தேனி கிளை:

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தேனி கிளையின் பொதுக்குழு கூட்டம் மற்றும் கிளைச்சங்கப் பொறுப்பாளர்களுக்கான தேர்தல் 31.10.2014 அன்று மாலை 6.30 மணியளவில் பொறி. எஸ். சந்திரசேகரன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளராக மைய மண்டல செயலாளர் பொறி. திருமதி. எஸ். லீலாவதி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் தேனி கிளைக்கு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறி. எஸ். சந்திரசேகரன் |
| உபதலைவர் | : | பொறி. எம் விஜிபாபு |
| செயலாளர் | : | பொறி. நா. முத்தையா |
| இணைச் செயலாளர் 1 | : | பொறி. எஸ். செந்தில்குமார் |
| இணைச் செயலாளர் 2 | : | பொறி. செ. செல்லக்குமார் |
| பொருளாளர் | : | பொறி. மா. சென்ராம் |

**தீர்மானங்கள்:**

1. தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக சென்னையில் நடத்திட பொதுச் செயலாளர், தலைவர் மற்றும் ஏனைய பொறுப்பாளர்கள் அனைவருக்கும் பாராட்டுகளையும், கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து பெரியோர்களுக்கும், பொறியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. அடுத்து தேர்வு செய்யப்படும் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் 2000-ம் வருடத்திற்குப்பின் உதவிப் பொறியாளராக பதவி மாற்றம் ஆணை பெறப்பட்ட நமது சங்க பொறியாளர்களை விடுபடாது இடம் பெற செய்யவும் இவ்விசயத்தில் எவ்வித இடையூறுகளும் ஏற்படாத வண்ணம் விழிப்புடன் செயல்படவும் மையச்சங்கத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. பட்டயக்கல்வி தகுதியுடன் பணி ஆய்வாளராக (தரம் - 2) பணிபுரியும் பொறியாள சகோதரர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு மாற்றம் விரைந்து பெற்றுத்தர மையச்சங்கத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் பணி ஆய்வாளர் பதவியிலிருந்து நேரிடையாக இளம்பொறியாளர் பதவி உயர்வு பெறலாம் என சில இடங்களில் ஒரு சிலர் தவறான தகவலைத் தந்து திசை திருப்ப முயற்சிப்பதாக தெரியவருகிறது. எக்காரணம் கொண்டும் அதனை நம்பி மோசம் போக வேண்டாம் என பணி ஆய்வாள நண்பர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் இது விசயத்தில் கவனம் செலுத்தவும் மையச்சங்கத்தினை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. தேனி கிளையின் பொருளாளர் பொறி. மா. சென்ராம், உதவிப் பொறியாளர் அவர்களின் புதல்வர் செல்வன் எஸ். மதன் அவர்கள் 07.10.2014 அன்று இயற்கை எய்தியமைக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**திண்டுக்கல் கிளை:**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திண்டுக்கல் கிளையின் பொதுக்குழுக் கூட்டமும், 2014 - 15 ஆம் ஆண்டிற்கான கிளைச்சங்க பொறுப்பாளர்கள் தேர்தலும், 25.10.2014 சனிக்கிழமை 11.00 மணியளவில் கிளைத்தலைவர் பொறி. எம். விஜிபாபு தலைமையில், திண்டுக்கல் V.G.S. Mahal-ல் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக மாநில பொதுச் செயலாளர் பொறி. த. முருகேசன் மற்றும் மையமண்டல செயலாளர் பொறி. எஸ் லீலாவதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இறைவணக்கத்திற்குப் பின் உறுப்பினர்கள் அறிமுகம் செய்த பின்பு கிளை இணைச் செயலாளர் பொறி. வே. சரவணகுமார் வரவேற்புரையாற்றினார்.

கிளைத்தலைவர் உரைக்குப்பின் கிளைச்செயல்பாடுகள் பற்றி கிளைச் செயலாளர் பொறி. எஸ். பாண்டியராஜ் உரையாற்றினார். உறுப்பினர்கள் பொறி. எம். விஜயமூர்த்தி, பொறி. அ. கண்ணன் மற்றும் பொறி. கே.கே. ஆறுமுகம் தங்களது கருத்துகளை தெரிவித்தபின்பு கிளை வரவு - செலவு கணக்குகளை பொருளாளர் பொறி. பொ. பன்னீர் செல்வம் அவைக்கு சமர்பித்து ஒப்புதல் பெற்றார். மையமண்டல செயலாளர் பொறி.எஸ்.லீலாவதி உரைக்குப்பின் மாநில பொதுச் செயலாளர் பொறி. த. முருகேசன் அவர்கள் மையச்சங்க செயல்பாடுகள் குறித்து விரிவாக உரையாற்றினார். பின்னர் 2014 - 15 ஆண்டிற்கான கிளைப் பொறுப்பாளர்கள் தேர்தல் பொதுச் செயலாளர் மற்றும் மண்டல செயலாளர் அவர்களால் நடத்தப்பட்டது. கீழ்க்கண்ட பொறியாளர்கள் ஏகமனதாக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய பொறுப்பாளர்கள், பொதுச் செயலாளர் முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறி. எஸ்.பாண்டியராஜ், உதவி செயற்பொறியாளர் |
| துணைத்தலைவர் | : | பொறி. சு. தனசேகர், இளம்பொறியாளர் |
| செயலாளர் | : | பொறி. வே. சரவணகுமார், இளம்பொறியாளர் |
| இணைச் செயலாளர் 1 | : | பொறி. த. ரவிச்சந்திரன், இளம்பொறியாளர் |
| இணைச் செயலாளர் 2 | : | பொறி. கே.கே. ஆறுமுகம், இளம்பொறியாளர் |
| பொருளாளர் | : | பொறி. பொ. பன்னீர்செல்வம், இளம் பொறியாளர் |

பின்னர் துணைத்தலைவர் பொறி. எஸ். தனசேகரன் நன்றி கூற கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றி நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

**தீர்மானங்கள்:**

1. தமிழ்நாடு பொறியியல் சங்க நூற்றாண்டு விழாவினை சிறப்பாக ஏற்பாடுகள் செய்து செயல்படுத்தியதற்கும், விழாமலர் சிறப்புடன் தயாரித்து அளித்ததற்கும் மையச்சங்க பொறுப்பாளர்கள் மற்றும் இதர பொறுப்பாளர்களுக்கும் மூத்தப் பொறியாளர்களுக்கும் திண்டுக்கல் கிளையின் சார்பாக மனமார்ந்த பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

2. எஞ்சியுள்ள அனைத்து இளம்பொறியாளர்களுக்கும் பணிவரன்முறை செய்து தர கோருதல்.

3. தகுதி வாய்ந்த தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு இளம்பொறியாளர் பதவி உயர்வு பெற்றுத்தர கேட்டு கொள்ளப்படுகிறது.

4. பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்களுக்கு, தொழில்நுடப உதவியாளர் பதவி பெற்றுத்தர கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**புதுக்கோட்டை கிளை:**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், புதுக்கோட்டை கிளையின் பொதுக்குழு கூட்டம் 18.10.2014 சனிக்கிழமை அன்று காலை 11.30 மணியளவில் புதுக்கோட்டை பொதுப்பணித்துறை வளாகத்திலுள்ள கிளைச்சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. கிளையின் உபதலைவர் பொறியாளர். சி.சித்தார்த்தன் அவர்கள் தலைமையில் கூட்டம் துவங்கியது. கிளைச்சங்க நடவடிக்கைகளை கிளைச்செயலாளர் பொறியாளர். ஜி. அண்ணாமலை அவர்கள் விரிவாக எடுத்துரைத்தும் புதுக்கோட்டை கிளை சிறிய கிளையாக இருந்தாலும் கூட பொதுக்குழு கூட்டத்திற்கு அதிக அளவில் உறுப்பினர்கள் வருகை புரிந்ததற்கு பாராட்டு தெரிவித்தும் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்று முடிந்தமைக்கு பாராட்டு தெரிவித்தும் பேசினார். கிளையின் வரவு - செலவு அறிக்கையானது கிளையின் பொருளாளர் பொறியாளர் கா. வெள்ளிமலை அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு அவையின் ஒப்புதல் பெறப்பட்டது. மையச்சங்கத்தின் சார்பில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்ட மாநில துணைத்தலைவர் பொறியாளர் எம். பஞ்சவர்ணம் அவர்களும், கிழக்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் ஆர். வேதமூர்த்தி அவர்களும் நடவடிக்கைகளை விரிவாக எடுத்துரைத்தனர். பொறியாளர்கள் கே. சத்தார், ஜி. அண்ணாமலை, டி.எஸ். பார்த்திபன், எஸ். முகமது கவுஸ் மற்றும் கா. வெள்ளிமலை ஆகியோர் கேட்ட சந்தேகங்களுக்கு மையச்சங்க பொறுப்பாளர்கள் விளக்கமளித்தனர். அதன் பிறகு 2014 - 2015-ம் ஆண்டிற்கான கிளை பொறுப்பாளர்கள் தேர்தல் நடைபெற்றது. கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் போட்டியின்றி ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறியாளர். சி. சித்தார்த்தன் |
| துணைத் தலைவர் | : | பொறியாளர், கே. சத்தார் |
| செயலாளர் | : | பொறியாளர். ஜி. அண்ணாமலை |
| இணைச் செயலாளர் 1 | : | பொறியாளர். என். பாஸ்கர் |
| இணைச் செயலாளர் 2 | : | பொறியாளர். ஜெ. ஜோசப் அமிர்தராஜன் |
| பொருளாளர் | : | பொறியாளர். கா. வெள்ளிமலை |

கிளையின் உபதலைவர் பொறியாளர் கே. சத்தார் அவர்கள் நன்றி நவில தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.



**சிவகங்கை கிளை:**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சிவகங்கை கிளையின் பொதுக்குழு கூட்டம் 05.10.2014 அன்று காலை 10.40 மணியளவில் கிளை உபதலைவர் பொறி. கே. சண்முகம் தலைமையில் காரைக்குடி பொதுப்பணித்துறை வளாகத்தில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர்களாக மையச்சங்க உபதலைவர் பொறி. எம். பஞ்சவர்ணம் மற்றும் மையச்சங்க சட்டம் & அமைப்பு செயலர் பொறி. கே. கமால்தீன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

உபதலைவர் உரைக்குப்பின் கிளைச் செயலாளர் பொறி. வி. பரமசிவம் மற்றும் மையச்சங்க பொறுப்பாளர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி எடுத்து கூறினார்கள். பொருளாளர் பொறி. எஸ். குமார் அவர்கள் கிளை சங்க வரவு செலவுகளை எடுத்துரைத்து அவையின் ஒப்புதல் பெற்றார். நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பாக நடத்தியது குறித்து உறுப்பினர்கள் மையச்சங்கத்திற்கு நன்றி தெரிவித்து பாராட்டினர். பொறி.எ.திருவேங்கடமூர்த்தி நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

பின்னர் 2014 - 2015 - ம் ஆண்டிற்குரிய சிவகங்கை கிளையின் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

| | |
|---|---|
| தலைவர் | : பொறி. எ. பூச்சந்திரன், உதவி செயற்பொறியாளர் |
| துணைத்தலைவர் | : பொறி. சி. இராஜ், உதவிப் பொறியாளர் |
| செயலாளர் | : பொறி. வி. பரமசிவம், உதவி செயற்பொறியாளர் |
| இணைச் செயலாளர் 1 | : பொறி.எ.திருவேங்கடமூர்த்தி,உதவி செயற்பொறியாளர் |
| இணைச் செயலாளர் 2 | : பொறி. எ. இளங்கோவன், உதவி செயற்பொறியாளர் |
| பொருளாளர் | : பொறி. எஸ். குமார், உதவி செயற்பொறியாளர் |

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானங்கள்:**

1. தமிழ்நாடு பொறியியல் சங்க நூற்றாண்டு நிறைவு விழாவினை மிகமிக சிறப்பான முறையில் நடத்திய மையச்சங்க பொறுப்பாளர்களையும், அதற்கு உறுதுணையாக பணியாற்றிய ஏனைய பொறுப்பாளர்களையும் சிவகங்கை கிளை மனதார பாராட்டுகிறது.

2. புதிதாக துறையில் காலியாக உள்ள தொழில்நுட்ப உதவியாளர், வரைதொழில் அலுவலர் மற்றும் இளம்பொறியாளர் பணி நியமனம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்க மையச்சங்கத்தை வேண்டி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

3. மீதமுள்ள இளம் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் பணிவரன்முறை (Regularisation) செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க மையச்சங்கத்தை வேண்டி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

4. தலைமைப் பொறியாளர்(பொது) அலுவலகத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள உதவி செயற்பொறியாளர் முதுநிலைப்பட்டியலை (Classified List) நமது சங்க உறுப்பினர்களுக்கு பெற்றுத்தர தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.









## யூகலிப்டஸ் மரம் நிலத்தடி நீரை அதிகமாக உறிஞ்சுமா?

இந்தக் கேள்வி பல வருடங்களாக நீரியல் பொறியாளர்கள் மத்தியில் இருக்கிறது. பல நிலைகளில் இதற்கான பதிலைத் தெரிந்துகொள்ள முயன்றும் அதிகாரப்பூர்வமான விடையைப் பெற முடியவில்லை. சமீபமாக இம்மரத்தின் குணநலன்களைப் பற்றி தெரிய வந்துள்ளது. இயற்கை விஞ்ஞானியான திரு. ஆர். எஸ். நாராயணன் இவ்வாறு கூறுகிறார்.

யூகலிப்டஸ் மரங்களின் தாயகம் ஆஸ்திரேலியா 1770-ல் அமெரிக்க கப்பலோட்டி கேப்டன் குக் என்பவர் இதைக் கண்டுபிடித்தார். யூகலிப்டஸ் மரங்களில் 600 ஜாதிகள் உண்டு. இவற்றில் 100 ஜாதிகள் இந்தியாவில் உள்ளன. முக்கினயமாவை இரண்டு. ஒன்று சமநிலத்தில் வளரும். இது காகிதம் தயாரிப்புக்கான மூலப்பொருள். மற்றொன்று மலையில் வளரும் தைலமாகும். சமநிலத்தில் வளரும் யூகலிப்டஸ் மரங்கள் காகித மரங்கள் டேராடூனுக்கு வந்தன. தைலமரங்கள் நீலகிரிக்கு வந்தன. தூரத்திலிருந்து பார்த்தால் மலையே நீலமாகத் தெரிந்ததால் தைலமரக்காடுகளை வைத்தே "நீலகிரி" என்று பெயர் வந்தது.

யூகலிப்டஸ் மரம் பற்றி தவறான கருத்துகள் பரவியுள்ளன. டேராடூனில் உள்ள "வன ஆராய்ச்சி மையம்" நிகழ்த்திய பரிசோதனைகள் மூலம், யூகலிப்டஸ், நீர் உறிஞ்சி மரமல்லவென்றும், குறுகிய மண்கண்டத்தில் கூட வேரைச் செலுத்தும் தன்மையினால் மரத்தின் மீது விழும் மழைநீர் ஆழமான நிரத்தடி நீரை நிரப்புமே தவிர, ஏற்காது என்றும், பக்கவேர் பலமானவை அல்ல என்பதும் நிரூபணமாகியுள்ளது.

பிரிபடாத ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, மகாராஷ்டிரம், சத்தீஸ்கர், ஒடிசா, கேரளம், ஹரியானா ஆகிய மாநிலங்களில் 1.70 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் சுமார் ஒரு லட்சம் விவசாயிகளுடன் ஒப்பந்த முறையில் இன்று I.T.C. (இந்தியன் புகையிலைக் கம்பெனி) நிறுவனம் யூகலிப்டஸ் மர சாகுபடியை வெற்றிகரமாகச் செய்து வருகிறது.

**-நன்றி: தினமணி. 30.10.2014.**

**M. சவரிராஜ்,**
செயற்பொறியாளர்,பொபது (ப.நி)
மதுரை.

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண்:555 பொதுப்பணி(எப்1)த்துறை நாள் 31.11.2014)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | R. ஏமராஜ் | முதன்மை தலைமைப் பொறியாளர் , நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) |
| 2. | P. மாரியப்பன் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 3. | A. மணி | கண்காணிப்புப் பொறியாளர் |
| 4. | N. போஜையா | உதவி செயற்பொறியாளர் |

(ஆளுநரின் ஆணைப்படி)


**எம். சாய்குமார்**
அரசு முதன்மைச் செயலாளர்




# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்! வணக்கம்!

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் திருவருள் துணைக்கொண்டு நிகழும் மங்களகரமான ஜய வருடம் தை மாதம் 12-ம் தேதி (26.01.2015) திங்கட்கிழமை, சுக்லபட்சம், சப்தமி திதி, ரேவதி நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9.00 மணிக்குமேல் 10.30 மணிக்குள் மீன லக்னத்தில்



வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பல்லலகுப்பம் கிராமம், எலக்கபாடி தெய்வத்திரு A.M.கிருஷ்ணசாமி நாயுடு - தெய்வத்திருமதி சரஸ்வதி இவர்களின் பௌத்திரியும், உப்பரபல்லி கொல்லா திரு. K.V. ஜோதி நாயுடு - திருமதி சுலோச்சனா இவர்களின் தௌத்திரியும், எங்களின் கனிஷ்ட குமாரத்தியுமான திருவளர்ச்செல்வி



## R. ஹேமாரதி (எ) சௌமியா, B.E.,

என்கிற கன்னிகையை

வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், குட்டகந்தூர் கிராமம், அனுமலமுடி தெய்வத்திரு. A.V. செங்கல்வராய நாயுடு - தெய்வத்திருமதி கண்ணம்மாள் இவர்களின் பௌத்திரனும், சாந்தம்பாக்கம், தெய்வத்திரு.துரைசாமி நாயுடு - திருமதி துரைசாணி அம்மாள் இவர்களின் தௌத்திரனும், A.C. வில்வநாதன் - பத்மாவதி அவர்களின் இளைய குமாரனுமான திருவளர்ச்செல்வன்

## A.V. சத்தீஷ், B.E.,

என்கிற வரனுக்கு

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயித்த வண்ணம், மேற்படி திருமணம் வேலூர், சத்துவாச்சாரி, ஸ்ரீ கிருஷ்ண மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறும் திருமணத்திற்கு தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அவ்வண்ணமே கோரும்:**
A.C. வில்வநாதன், Ex. President
பேர்ணாட்பட் தெற்கு ஒன்றிய தி.மு.க.செயலாளர்
பத்மாவதி வில்வநாதன், Ex. Chairman
ஒன்றிய குழு உறுப்பினர், குட்டகந்தூர்.



**தங்கள் அன்புள்ள,**
**திரு. K. ரவி, D.C.E., B.Tech.,**
உதவிப் பொறியாளர், பொ.ப.து.,
**திருமதி. கலாவதி ரவி**
Cell: 94430 40842

வரவேற்பில் மகிழும்: R. சேஷன்ராஜ், B.E.

Under Postal Regd No. TN/CH/(C)/358/15-17 & TN/PMG (CCR) WPP No.308/2015-17
Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

JANUARY 2015

# மாநிலச் செயற்குழுக் கூட்டம்

நாள் : 31.01.2015, சனிக்கிழமை
காலை 10.30 மணி

இடம் : ஜே.எம்.எஸ். திருமண மண்டபம்
எண். 2, பங்காரு அம்மன் தோட்டம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில்,
காஞ்சிபுரம் - 1
Ph No. 044 - 2723 7411

மையச் சங்க பொறுப்பாளர்கள், கிளைச் சங்க பொறுப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோர் கூட்டத்தில் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொறி. எஸ். கண்ணன்
- செயலாளர் அமைப்பு மற்றும் சட்டம்

நமது சங்கத்தின் Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

தந்தி பொறியாளர்
தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

**Published on 03-01-2015**
**Postng on 05-01-2015**

**REGD. NEWS PAPER**
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்
CHANDRAN .V
Asst. Exe. Engineer, PWD
No.8/1/5, PWD Quarters, Opp. to
Court Building, Sivakasi Road,
Srivilliputthur - 626 125.

EDITED BY: **Er. D. MURUGESAN,** D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5.
PUBLISHED BY: **Er. S. KANNAN,** D.C.E. B.E., PUBLICATION SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: **Mr. K.P.THIYAGARAJAN** AT KALAIYARAM PRINTERS, 182, BELLS ROAD, CHEPAUK, CHENNAI-5. PHONE: 2854 8223.